தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் விருதுநகர் மாவட்டம் (இருப்பு ) ஸ்ரீவில்லிபுத்தூர்

**PRESENT :** Tmt.Gajara R.Jiji., M.A.,LL.M.,
Chief Judicial Magistrate, Srivilliputtur.

2023 ஆம் வருடம் ஜனவரி மாதம் 04ம் தேதி புதன்கிழமை

ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.825/2022

தமிழ்நாடு அரசின் பிரதிநிதி,
துணை இயக்குநர்,
நடமாடும் கண்காணிப்புக்குழு,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
விருதுநகர். ... குற்றமுறையிடுபவர்

- எதிர் -

இரா.பிரம்மன் ... குற்றம் சாட்டப்பட்டவர்

குற்றச்சாட்டு : குழந்தை தொழிலாளர் மற்றும் வளரினத்தவர் (தடைசெய்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம்) 1986 திருத்தப்பட்ட சட்டம் 2016 மற்றும் தமிழ்நாடு விதிகள் 1988 ன்படி பிரிவு 67 மற்றும் உடன்பிரிவு 14(1A)ன்படி

*******

இவ்வழக்கு 31.10.2022 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் துணை இயக்குநர், நடமாடும் கண்காணிப்புக்குழு, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், விருதுநகர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.சரவணன் அவர்கள் ஆஜராகியும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

கடந்த 12.07.2022 அன்று முற்பகல் 11.50 மணியளவில் வாதி விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், வெற்றிலையூரணி கிராமத்தில் எதிரிக்குச் சொந்தமான சன் இண்டியாக பயர் ஒர்க்ஸை ஆய்வு செய்தபோது தொழிற்சாலையில் 14 வயது நிறைவடையாத பெண் குழந்தை செல்வி.கற்பகஜோதி, வயது 13, த/பெ.பொன்னுச்சாமி, சல்வார்பட்டி, என்பவர் அறை எண்.54-ல் தாழ்வாரத்தில் பூச்சட்டி கூட்டிற்கு மேல்தாள் ஒட்டுதல் பணியில் அனுமதித்திருந்ததை ஆய்வின்போது கண்டறியப்பட்டது. எதிரியின் செயல் குழந்தை தொழிலாளர் மற்றும் வளரினத்தவர் (தடைசெய்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம்) 1986 திருத்தப்பட்ட சட்டம் 2016 மற்றும் தமிழ்நாடு விதிகள் 1988 சட்டப் பிரிவு 67 மற்றும் உடன்பிரிவு 14(1A)ன்படி முரணானது என்று எதிரி மீது வாதி தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளார்.

புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரியின் வழக்குரைஞர் ஆஜரானார்.

2. குற்றமுறையிடுபவர் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களின் நகல்கள் எதிரிக்கு முறையாக வழங்கி குற்றம் பற்றி எடுத்துக் கூறி வினவியபோது எதிரியின் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டு எதிரி குற்றவாளிதான் என்று கூறினார். எதிரி தரப்பில் குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

3. எதிரியின் தன்னிச்சையான குற்ற ஒப்புதலை கருத்தில் கொண்டு எதிரி குழந்தை தொழிலாளர் மற்றும் வளரினத்தவர் (தடைசெய்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம்) 1986 திருத்தப்பட்ட சட்டம் 2016 மற்றும் தமிழ்நாடு விதிகள் 1988 சட்டப் பிரிவு 67 மற்றும் உடன்பிரிவு 14(1A)ன்படி ற்றவாளி என்று தீர்மானித்து ஷை குற்றத்திற்கு எதிரிக்கு அபராதம் ரூ.25000/- விதித்தும் கட்டத் தவறினால் 1 மாதம் மெய்க்காவல் சிறைத் தண்டனை விதித்தும், உத்தரவிடப்படுகிறது.

மொத்த அபராதத் தொகை ரூ.25000/-.

4. மொத்த அபராத தொகையை பாதிக்கப்பட்ட குழந்தை செல்வி.கற்பகஜோதி, வயது 13, த/பெ.பொன்னுச்சாமி, சல்வார்பட்டி என்பவரது மறுவாழ்வுக்காக கீழ்கண்ட வங்கியின் பெயரில் NAME : District Collector/Chairman, A/c. No. : 708743396, Virudhunagar District Child & Adolescent Labour Rehabilitation Cum Welfare Society, Virudhunagar Bank : Virudhunagar District Co-operative Bank, Branch : Virudhunagar Collectorate Branch-ல் ரூ.25000/- த்தை குழந்தையின் பெயரில் மேற்படி வங்கி கணக்கில் வைப்பீடு செய்ய வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2023ம் ஆண்டு ஜனவரி திங்கள் 04ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

தலைமை நீதித்துறை நடுவர்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

<u>இணைப்பு</u> : இல்லை.

தலைமை நீதித்துறை நடுவர்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.